VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To | Printed Matter

______________________

______________________

______________________

______________________

If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:3 இதழ்:9 ஜூன்:2019 ரூ.10/– வருட சந்தா:ரூ.100/–
Volume:3 Issue:9 June:2019 Rs.10/- Annual Subs: Rs.100/-



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு,
கோட்டூர், சென்னை – 600 085.
போன்: 044 — 2447 4744

ஸ்ரீ மஹா மேரு மண்டலி சார்பாக மேற்கண்ட விலாசத்தில் ஸ்ரீ குருஜி ஆக்ஜையின் படி ஸ்ரீ சௌந்தர்யலஹரி, சிவாநந்தலஹரி, ஸோஸ்த்திரங்கள் பாராயணம் நடைபெற்று வருகிறது.சேவார்த்திகள் கலந்து கொள்ளலாம்.

மேலும் தொடர்புக்கு :

**9444060346**

## குரு பூர்ணிமா - 16.07.2019

இந்த ஆண்டு குரு பூர்ணிமா விழா 16.07.2019 அன்று நாமக்கல் மாவட்டம் சேந்தமங்களத்தில் மன்மலை மற்றும் தத்தமலை – தத்தாஸ்ரமத்தில் அனைத்துள்ள குருமார்களின் ஸதலங்களில் ஸ்ரீ மஹா மேருமண்டலி சிஷ்யர்களால் நடைபெற உள்ளது.

மேலும் தொடர்புக்கு :

**9444075811**



# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street, Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND**



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**





# வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 9

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**புத்தகக் குழு :**
**ஸ்ரீ டி. சூரியநாராயணன்**
**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**
**ஸ்ரீமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**
**ஸ்ரீ ஸ்ரீகாந்தன்,**
**ஸ்ரீ சௌந்தரராஜன்,**
**ஸ்ரீ விஸ்வநாதன்**
**ஸ்ரீ ஸ்ரீநிவாசன்,**
**வேளச்சேரி ஸ்ரீ நடராஜன்,**
**ஸ்ரீ ஸ்வாமிநாதன்,**
**நங்கநல்லூர் ஸ்ரீ விஸ்வநாதன்,**
**ஸ்ரீ மணிசங்கர்**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020**


# புத்தகத்தின் உள்ளே


ஒரு நிமிடம் உங்களோடு 4
மே மாத விசேஷங்கள் 5
அட்டைப்பட விளக்கம் 6
பிரதக்ஷிணம் 9
சுபாஷிதம் 11
ஸ்ரீமத் பகவத்கீதை 12
புதுச்சேரி வேதபாரதி (திருமீயச்சூர்)
பயணக்கட்டுரை 14
ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரரின் ஜயந்தி 15
சிருங்கேரி ஜகத்குரு மகா ஸ்வாமிகள்
அருளியவை 16
மஹாபெரியவா ஜயந்தி 18
பெற்றோர்களே கவனியுங்கள் 26
தர்மத்தின் குரல் 28
ப்ராஜெக்ட் மீனம்மா 32



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும்.
சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்டஸ்**
1, லட்சுமிநகர்,
100 அடி சாலை, வேளச்சேரி,
சென்னை - 42. செல்: 8939000064

## ஒரு நிமிடம் உங்களோடு!

ஒரு நாட்டில் ஒரு இடையன் காட்டில் தன்னுடைய ஆடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லும்போது ஒரு இடத்தில் ஒரு சிங்கம் இறந்து கிடப்பதையும் அதன் அருகில் அப்போதுதான் பிறந்திருந்த ஒரு சிங்கக்குட்டியும் இருப்பதைப் பார்த்தான். அவன் அந்த சிங்கக்குட்டியை எடுத்துவந்து தன்னுடைய ஆடுகளுடன் வளர்க்க ஆரம்பித்தான் அப்படி ஆடுகளுடன் வளர்ந்த அந்த சிங்கக்குட்டி தன்னுடைய பலத்தையும் சக்தியையும் மறந்து ஒரு ஆட்டுக்குட்டியாகவே வளர ஆரம்பித்தது.

ஒரு சமயம் அந்த இடையன் தன் ஆடுகளுடன் அந்த சிங்கக்குட்டியையும் காட்டிற்கு மேய்ச்சலுக்கு அழைத்துப் போனபோது ஒரு சிங்கம் அந்த ஆட்டுக்குட்டியை பார்த்துவிட்டது. நம்முடைய வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு குட்டி ஆடுகளுடன் சேர்ந்து இருப்பது நமக்கு அவமானம் என்று நினைத்து அந்த சிங்கம் அந்த குட்டியை கடித்து இழுத்துவந்து ஒரு தடாகத்தின் அருகில் அந்த சிங்கக்குட்டியை வைத்து தன் உச்சத்தில் கர்ஜித்துக் கொண்டு அந்த சிங்கக்குட்டியிடம் "என்னுடைய முகத்தை நீ முதலில் பார், பிறகு உன் முகத்தை இந்த தண்ணீரில் பார், என்னுடைய முகத்தில் உள்ள வீரத்தை நீ உன்னுடைய முகத்திலும் இருப்பதை இந்த தண்ணீரில் காணும் உன்னுடைய முகத்திலும் காண்பாய்" என்றது. இதை அந்த சிங்கக்குட்டியும உணர்ந்தது. பிறகு அந்த சிங்கம் ஒரு மானை கடித்து அந்த மாம்சத்தை கொண்டுவந்து அந்த சிங்கக்குட்டிக்கு கொடுத்து சாப்பிடச் சொன்னது முதலில் அதை சாப்பிட முடியாகத சிங்கக்குட்டி கடைசியில் அதைச் சாப்பிட்டது. அதன் பிறகு அந்த குட்டிக்கு கர்ஜிக்கவும் கற்றுக் கொடுத்தது. சிங்கக்குட்டியும் அதே போல் கர்ஜித்தது. பிறகுதான் அந்த குட்டிக்குத் தெரிந்தது "இந்த எல்லாம் என்னுள்ளே இருப்பவைதான்" என்று.

இதே போல் தான் நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருக்கும் சக்திகளை அறிவதில்லை. நம்மில் அந்தர்லினமாக இருக்கும் சக்திகளை நாம் வெளிப்படுத்த வேண்டி வழிகளை காட்டித்தரும் சாஸ்திரங்கள்தான் "ஆத்யாமிக சாஸ்திரங்கள்", சிறுவயது முதலே நாம் நம்மிடம் இருக்கும் சக்திகளை அறியாமல் மற்றவர்களிடம்தான் சக்தியை காண்கின்றோம். நம்மில் இருக்கும் சக்தியை நாம் அறிய வேண்டுமானால் அதற்கு நாம் செய்ய



வேண்டியது ''சாதனை'' ''சாதனை''. அந்த சக்தியை அறிந்துக்கொண்டு நம்முடைய வாழ்க்கையை நாம் உயர்த்திக்கொள்ள வேண்டும். அனுமனுக்கு உள்ள சக்தியை ஜாம்பவான் சுட்டிக் காட்டி " நீ வாயு புத்திரன்" சிறுவதில் சூரியனை பிடிக்க 300 அடி யோஜனை சாடிய உனக்கு 100 யோஜனை தாண்டி இலங்கையை அடைவது கஷ்டமில்லை " என்று ஞாபகப்படுத்தியது போல் நம்முடைய ரிஷிகள் நம் உள்ளே அந்தர்லினமாக இருக்கும் சக்தியை நமக்கு காட்டித்தருகிறார்கள். அவற்றை அறிந்து நாம் நம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

**- டி. சூரியநாராயணன்**

---

## ஜுன் மாத விசேஷங்கள்

### (ஜுன் 1/2019 முதல் ஜுன் 30/2019 வரை)

| தேதி | கிழமை | விசேஷம் |
|---|---|---|
| 1 | சனி | மாத சிவராத்திரி |
| 2 | ஞாயிறு | கிருத்திகை / போதாயன அமாவாகை |
| 3 | திங்கள் | அமாவாசை / அரசமர பிரதக்ஷணம் |
| 4 | செவ்வாய் | சந்திர தரிசனம் / வாஸ்துநாள் |
| 6 | வியாழன் | சுக்ல சதுர்த்தி விரதம் |
| 8 | சனி | சுக்ல ஷஷ்டி விரதம் / குச்சனூர சனி பகவான் ஆராதனை |
| 9 | ஞாயிறு | பானு சப்தமி |
| 13 | வியாழன் | சர்வ நிர்ஜல ஏகாதசி |
| 14 | வெள்ளி | ப்ரதோஷம் |
| 15 | சனி | ஷடிசீத புண்யகாலம் / அனுஷ நக்ஷத்திர ஜெயந்தி சபரிமலை நடை திறப்பு |
| 16 | ஞாயிறு | பௌர்ணமி பூஜை |
| 20 | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் / சபரி மலை நடை அடைப்பு |
| 21 | வெள்ளி | ச்ரவண விரதம் |
| 22 | சனி | திருநள்ளாறு சனி பகவான் ஆராதனை |
| 23 | ஞாயிறு | கிருஷ்ண ஷஷ்டி |
| 25 | செவ்வாய் | கிருஷ்ண அஷ்டமி |
| 28 | வெள்ளி | ஏகாதசி விரதம் |
| 29 | சனி | கிருத்திகை விரதம் / கூர்ம ஜெயந்தி |
| 30 | ஞாயிறு | பிரதோஷம் |

## அட்டைப்பட விளக்கம்

## "கூர்ம ஜயந்தி"

### கூர்ம அவதாரம்

பகவான் மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் மொத்தம் பத்து. அதாவது மச்ச, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமண, பரசுராம, பலராம, ராம, கிருஷ்ண, கல்கி இவற்றில் கல்கி அவதாரம் இன்னும் நிகழவில்லை. அவர் எடுத்துள்ள அவதாரங்கள் பரிணாம வளர்ச்சியையும், சகல ஜீவராசிகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறுகின்றன. பகவான் அவதாரக்ஙள் எடுத்ததன் நோக்கமே அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டவே எடுக்கப்பட்டன. அவதாரங்களில் இரண்டாவது அவதாரம் "கூர்ம அவதாரம்". இந்த அவதாரத்தில் மட்டும் பகவான் தீயவர்களை அழிக்காமல் பலருக்கும் நன்மையைக் கொடுக்கவும், பல பொருட்களை தோற்றுவித்து நற்பலனை கொடுத்தார். இந்த அவதாரம் கிருத யுகத்தில் நடைபெற்றது. கூர்ம அவதாரம் நிகழ்ந்த நாளே "கூர்ம ஜெயந்தி" என்று கொண்டாடப்படுகிறது ஆனி மாத கிருஷ்ணபட்சத்தில், அதாவது தேய்பிறை துவாதசி திதியில் திருமாள் கூர்ம அவதாரம் எடுத்தாக புராணங்கள் கூறுகின்றன.

*பகவான் மஹாவிஷ்ணு ஏன் இந்த ஆமை (கூர்ம) ரூபம் எடுத்தார்?*

அசுரர்களும், தேவர்களும் மந்தர மலையை மத்தாகவும், வாசுகி பாம்பை கயிறாகவும் கொண்டு பாற்கடலை கடைந்தபோது பருமன் தாங்காமல் மந்தர மலை கடலில் மூழ்கியது. தேவேந்திரனும், தேவர்களும் பகவான் திருமாலை சரண் அடைந்தனர். பக்தர்களைக் காக்கும் திருவுளம் கொண்ட பகவான் மிகப்பெரிய ஆமையாக (கூர்மமாக) வடிவம் எடுத்து கடலில் மூழ்கி மலையைத் தாங்கிக் கொண்டு மேலே கொண்டுவந்தார். மலை நேராக நிமிர்ந்து வாசுகியால் கடையப்பட்டது. அதிலிருந்து அமிர்தம் மட்டுமல்லாமல் காமதேனு, கற்பக விருக்ஷம், கௌஸ்துப மாலை போன்ற பலவும் வந்து கடைசியாக தேவலோக சஞ்சீவியான அமிர்தத்தை ஏந்தியவாறு தன்வந்திரி மூர்த்தியும் தோன்றினார். இவ்வாறு தேவர்களும், பூவுலகும் நன்மை பெற செல்வங்களை அளித்தார்.



வர்ம மூர்த்தியான பகவான் திருமால்.

ஆமை என்றாலே அதை அபசகுனமாக சிலர் நினைப்பார்கள். ஆனால் ஆமை என்பது புலன்களை அடக்க காட்டப்படும் ஒரு ஊதாரணம். ஆமைக்கு ஏதாவது ஆபத்துவரும் போது அது தன் தலையையும் நான்கு கால்களையும் தன் ஓட்டுக்குள் ஒடுக்கிக்கொள்ளும். இதைத்தான் வள்ளுவரும் கூறுகிறார்.

ஒருமையுள் ஆமைப்போல் ஐந்தடன்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

*(குறள் எண் : 126)*

பொருள் ஒரு பிறப்பில் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால் அது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.

இதை உணர்த்தும் விதமாகத்தான் கோயில்களில் ஆமையின் உறுவம் வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 79 கோயில்களில் ஆமை உறுவம் உள்ளது. கேரளாவில் எல்லா கோயில்களிலும் இதைக் காணலாம்.

**கூர்ம ஜயந்தி : 29.05.2019 சனிக்கிழமை**

பக்தர்களுக்காக பாரம் சுமந்து பாதுகாத்த கூர்ம பகவானை "கூர்ம ஜயந்தி" அன்று ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ஸ்தோத்திரங்கள் அல்லது கீழ் உள்ள கூர்ம காயத்ரி மந்திரத்தை பலமுறை ஜபித்து கூர்ம பகவானை வணங்கி வளம் பெறுவோம்.

ஓம் தராதராய வித்மஹே
பாசஹஸ்தாய தீமஹி
தன்னோ கூர்ம ப்ரசோதயாத்

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

**குறிப்பு :**
**வேதபாரதி செய்திகள் புத்தகம் பிரதிமாதம் 12ம் தேதிக்குள் தங்களுக்கு தபால் மூலம் கிடைக்கவில்லை என்றால் 9443495950 / 9445102193 என்ற கைபேசி எண்ணிற்கு தங்கள் முகவரி, பின் கோடு மற்றும் தொலைபேசி எண்ணை SMS செய்யவும். உடன் தபாலில் அனுப்பி வைக்கிறோம்.**
**- வேதபாரதி**

# இறையருளுக்கு இனிய துதிகள்

"கடவுளிடம் நம்முடைய மனதை ஒருமுகப்படுத்தி ஆத்மார்த்தமாக வேண்டினால் இறையருள் பெறலாம்" என்று நமது இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. கடவுளைத் தாயாகவும், தந்தையாகவும், குழந்தையாகவும், உற்ற நண்பனாகவும் பாவித்து அவரது அழகிய திருக்கோலத்தையும், கருணையையும், வீர தீர பராக்கிரமங்களையும் போற்றி நம் மனக்குறைகளைக்கூறி அருள்புரியும்படி வேண்டுகிறோம். அவற்றின் காரணப் பெயரும் பொருளும் அறிந்து பாடினால் இன்னும் சிறப்பல்லவா? சமஸ்கிருத ஸ்லோகங்களுக்கு சூட்டப்பட்டுள்ள பொதுவான பெயர்களின் பொருளும் விளக்கங்களும், பயன்களும் இங்கே தரப்பட்டுள்ளன.

**1. அஷ்டோத்ரம், சத நாமாவளி :**

பொருள் : கடவுளின் 108 திருநாமங்களைக் கூறி மலர்களால் அர்ச்சனை செய்வது. அந்தந்த கடவுளுக்கும் அவருடைய 108 திர நாமங்களைச் சொல்லி அர்ச்சித்தல் நன்மைத்தரும்.

**2. ஸஹஸ்ர நாமாவளி :**

பொருள் : கடவுள்களின் 1008 திருநாமங்களைக் கொண்ட தொகுப்பு. எல்லா கடவுள்கள் பெயரிலும் ஸஹஸ்ரநாமம் சொல்லுவதுண்டு. உதாரணம் "விஷ்ணு ஸஹஸ்ரநாமம்" "லக்ஷ்மி ஸஹஸ்ரநாமம்" முதலியவை பிரபலமானவை

**3. திரிசதீ நாமாவளி :**

தேவியின் 300 திருநாமங்களைக் கொண்ட தொகுப்பு. உதாரணம் "லலிதா திரிசதீ நாமாவளி" "ச்யாமளா திரிசதீ நாமாவளி" மற்றும் பல.

**4. பஞ்ச சதி :**

செய்யுள் வடிவிலான ஐந்நூறு துதிகள் கொண்ட தொகுப்பு. உதாரணம் புலவர் காளிதாஸர் ஸ்ரீ காமாக்ஷி பெயரில் பாடிய 500 ஸ்லோகங்களே "மூக பஞ்ச சதி".

**5. ஸ்துதி :**

செய்யுளாகவோ அல்லது உரை நடையாகவோ அமைந்த மேலான பிரார்த்தனைகள். உதாரணம் "மஹாகணபதி ஸ்துதி" "ஆஞ்சநேயர் ஸ்துதி", "மஹாலஷ்மி ஸ்துதி" மற்றும் பல.



**6. ஸ்தோத்திரம் :**

உதாரணம் "விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்தரம், "ஸ்ரீ லலிதா மற்றும் லக்ஷ்மி ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்".

**7. அஷ்டகம் :**

எட்டுப் பகுதிகள் கொண்ட ஸ்துதி உதாரணம் "சுப்ரமணிய அஷ்டகம்", அன்னபூரண அஷ்டகம்" "லஷ்மி அஷ்டகம்", ஸ்ரீரங்கநாத அஷ்டகம்" "லிங்காஷ்டகம்" மேலும் பல.

**8. பஞ்சரத்னம் :**

செய்யுள் வடிவில் ஐந்து ஸ்துதிகள் கொண்ட தொகுப்பு உதாரணம் ''கணேச பஞ்சரத்னம், ''தக்ஷிணாமூர்த்தி பஞ்சரத்னம்", "அனுமத் பஞ்சரத்னம்" "மீனாக்ஷி பஞ்சரத்னம்" மற்றும் பல.

**9. புஜங்கம் :**

பாம்பு நெளிந்து ஊர்ந்து செல்வத போன்ற நடையில் எழுதப்பட்ட செய்யுள்கள். உதாரணம் "கணேச புஜங்கம்" "சுப்ரமணிய புஜங்கம்" "பவானி புஜங்கம்" "சாரதா புஜங்கம்" மற்றும் பல.

**10. லஹரி :**

அலைகள் அடிப்பது போன்ற நடையில் அமைந்த செய்யுள்கள் உதாரணம் அம்பாளின் குணங்களையும் அழகையும் வர்ணிக்கும் "ஸௌந்தர்ய லஹரி" "ஆனந்த லஹரி", "சிவானந்த லஹரி" மேலும் பல.

**11. தண்டகம் :**

ஒரு வகை அளவு கட்டுப்பாடு கொண்ட உடைநடை ஸ்துதி. உதாரணம் "ஸ்யாமளா தண்டகம்" "கருட தண்டகம்" மேலும் பல.

**12. கவசம் :**

நினைப்பவரை காக்கும் மந்திரம். எந்த கடவுளின் கவசத்தை பக்தியுடன் சொல்லுகிறோமோ அந்த கடவுள் நம்மைக் காப்பார். இது செய்யுள் நடையிலோ அல்லது உரை நடையிலோ இருக்கும்.

உதாரணம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை

சொல்லக்கூடிய "கந்தசஷ்டி கவசம்" "கந்தகுரு கவசம்" ஷண்முக கவசம்" கருட புராண நாராயணன கவசம் மற்றும் பல.

**13. ஸுப்ரபாதம் :**

கடவுளை பள்ளி எழுச்சி செய்ய விடியற்காலையில் பாடும் ஸ்துதி. உதாரணம் "ஸ்ரீவெங்கடேச ஸுப்ரபாதம்" 'ஸ்ரீகுருவாயூர் ஸுப்ரபாதம்" "ஸ்ரீ ராகவேந்திர ஸுப்ரபாதம்" மேலும் பல.

**14. காயத்ரி :**

காயத்ரி என்றால் ஜபிப்பவர்களைக் காப்பாற்றுகிறது என்று பொருள். உதாரணம் "நவகிரஹ காயத்ரி", விஷ்ணு காயத்ரி", "ஹனுமன் காயத்ரி" "துர்கா காயத்ரி" மற்றும் பல.

ஸ்தோத்திரங்களும், ஸ்துதிகளும், பாடல்களும் நமது முன்னோர்களால் நமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இவற்றில் நம்மால் இயன்ற அளவு துதித்து இறைவனின் அருளைப் பெறுவோமாக.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**



# 4. சுபாஷிதம்

''சுபாஷிதம்'' என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். சம்ஸ்கிருத பாடம் கற்றுக்கொள்ளும் போது இத்தகைய சிறு சிறு ஸ்லோகங்களை கற்றுத்தருவார்கள். இந்த வகையான ஸ்லோகங்கள் சொல்வதற்கு கம்பீரமானதாகவும் அந்த மொழியின் மீது ஒரு பிடிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தும் என்பது மறைபொருளாக இருந்தபோதிலும், இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவறும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**1. துர்பலஸ்ய பலம் ராஜா பாலானாம் ரோதனம் பலம்**
**பலம் மூர்க்கஸ்ய மௌனித்வம் சௌராணாம் அந்ருதம் பலம்**

பொருள் : அரசன் நலிந்தோரின் பலம்; அழுகை குழந்தையின் பலம்; மௌனம் மூர்க்கனின் பலம்; பொய்யுரைப்பது கள்வனின் பலம்.

**2. அஷ்வஸ்ய பூஷணம் வேகோ மந்தம் ஸ்யாத் கஜபூஷணம்**
**சாதுர்யம் பூஷணம் நார்யா உத்யோகோ நரபூஷணம்.**

பொருள் : வேகம் குதிரைக்கும், மந்தநடை யானைக்கும், புத்திசாலித்தனம் பெண்ணுக்கும், வேலை ஆணுக்கும் அணிகலன்கள்.

**3. அகர்தவ்யம் ந கர்தவ்யம்**
**ப்ரானை கண்டகதைரபி**
**லர்ட்ஜவ்ய மேவ கர்தவ்யம்**
**ப்ரானை கண்டகதைரபி**

பொருள் : 'எந்தச் செயல் தவறானதோ மரணமே வந்தாலும் அந்த செயலை செய்யக்கூடாது. எந்தச் செயல் சரியானதோ அதை மரணமே வந்தாலும் செய்து முடிக்க வேண்டும்.

**4. அயம் நிஜஹ் பரோவேத்தி கணனா லகு சேதசாம்**
**உதார சரிதானாம்து வசுதைவ குடும்பகம்**

பொருள் : இவன் நம்முடையவன்; அவன் வேறு என்கிற பேதம் குறுகிய மனம் உள்ளவர்களுக்குத்தான். பரந்த மனப்பான்மை உள்ளவர்க்கு உலகமே சொந்தக் குடும்பம்.

தொடரும்....

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

*என்றும் ஆன்மீக பணியில் :*
**பிரம்மஸ்ரீ முனிஸ்வர ஸாஸ்திரிகள்**
ஸ்தாபகர் ஸ்ரீ வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட், சென்னை.

## பிரதக்ஷிணம்

நம்முடைய பாரததேசத்தின் அடையாளமே கோயில்கள்தான். அதிலும் தமிழகத்தின் அடையாளம். உயர்ந்த அழகிய கோபுரங்களை உடைய கோயில்கள்தான். பெரிய பெரிய கோயில்களை எல்லாம் அந்த காலத்து அரசர்கள்தான் கட்டியுள்ளார்கள். அப்படி கட்டும்போது ஒவ்வொரு கோயிலிலும் ஏதாவது ஒன்றை தனித்தன்மையுடன் கட்டியுள்ளார்கள். பல கோயில்களில் விஞ்ஞானத்திற்கும் புரியாத பல அதிசயங்கள் நிகழ்கின்றன. தமிழகத்தில் மட்டும் 38,000 திற்கும் மேலாக கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் பல கோயில்களில் பல அதிசயங்கள் உள்ளன.

கோயில்களில் தெய்வங்களை வணங்கியபிறகு கோயிலை மூன்று முறை சுற்றிவருவது ஒரு மரபாகும். இதைத்தான் 'பிரதக்ஷிணம்' என்பார்கள்.

**'வேதபாரதி செய்திகள்'** வாசகர்களுக்காக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை **'பிரதக்ஷிணம்'** வர தீர்மானித்து இதுவரையில் 7 பிரதக்ஷிணம் வந்துள்ளோம்.

இந்த மாதம் "நிறம் மாறும் கல்யாண சுந்தரேஸ்வரர் (பஞ்சவர்ணேஸ்வரர்) கோவில் திருநல்லூர்." அதிசய கோயிலில் பிரதக்ஷிணம் வருவோம்.

### பிரதக்ஷிணம் (8)
### நிறம் மாறும் கல்யாண சுந்தரேஸ்வரர் (பஞ்சவர்ணேஸ்வரர்) கோவில். திருநல்லூர்.





தஞ்சாவூர் - கும்பகோணம் சாலையில் உள்ள பாபநாசம் என்னும் ஊரை அடுத்து வரும் "வாழைப்பழக் கடை" என்னும் ஊரிலிருந்து பிரியும் சாலையில் 1 கி.மீ. சென்றால் இந்த கோயிலை அடையலாம். இது ஒரு சிவஸ்தலம். இறைவன் பெயர் "கல்யாண சுந்தரேஸ்வரர்" தாயார் பெயர் "கல்யாண சுந்தரி".

இக்கோவிலில் உள்ள லிங்கத்தின் "பாணம்" எந்த பொருளால் உருவாக்கப்பட்டது. என்று கூறமுடியாத நிலையில் "தாமிர" நிறத்தில் காணப்படுகிறது. இதில் உள்ள அதிசயம் சுயம்புவான இந்த லிங்கம் 6 நாழிகைக்கு ஒரு முறை நிறம் மாறும் தன்மை கொண்டதாக இருக்கிறது. காலை 6 மணி முதல் 8.25 மணி வரையிலும் "தாமிர"நிறத்திலும், 8.26 முதல் 10.48 மணி வரையிலும் இளம் சிவப்பு நிறத்திலும், 8.49 மணி முதல் 1.12 வரையிலும் தங்கம் போன்ற நிறத்திலும், பகல் 1.13 முதல் 3.36 மணி வரையிலும் நவரத்தின பச்சை நிறத்திலும், மாலை 3.37 முதல் 6.00 மணி வரையிலும் இன்ன நிறம் என்று அறியமுடியாத நிறத்திலும் காட்சி தருகிறார். இது பக்தர்களை மெய்சிலிர்க்க வைக்கிறது. இந்த அற்புதம் வேறு எந்த கோவிலிலும் காணக்கிடைக்காத காட்சியாகும்.

மேலும் மூலஸ்தானத்தில் ஆவுடையாரில் இரண்டு "பாணங்கள்" உள்ளன. இப்படி இரண்டு பாணங்கள் உள்ள அமைப்பு வேறு எந்த கோவிலிலும் கிடையாது.

ஆதிசேஷனுக்கும் வாயு பகவானுக்கும் நடந்த சண்டையின்போது கயிலை மலையிலிருந்து வாயுவால் தூக்கி எரியப்பட்ட இரு சிகரங்களில் ஒன்று இத்தலம். இச்சிகரத்தில் தான் பகவான் எழுந்தருளியுள்ளார். மற்றொரு சிகரம் ஆவூரில் உள்ளது என்று வரலாறு கூறுகிறது.

அப்பர், சம்பந்தர் ஆகியோரால் பாடல் பெற்ற சிவாலயமாகும் இது. இந்த கோயில் இன்னும் ஏறாளமான சிறப்பு அம்சங்களைக் கொண்டது.

பிரதக்ஷிணம் தொடரும்...

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 34**

உடல் சார்ந்த பிரச்சினை வந்தால் உடனே மருத்தவரிடம் சென்ற உடல் நலத்தைப் பேணுகிறோம். அங்கு மருத்துவர் உடல் நல பாதுகாப்பு மேலாண்மையை நமக்கு கற்றுத் தருகிறார்.

பணப் பிரச்சினை என்றால் உடனே அதற்குரிய ஆலோசகரிடம் சென்று பண வரவு - செலவு மேலாண்மையை கற்றுக் கொள்கிறோம்.

அது போன்றே மனநிலைச் சார்ந்த குழப்பங்கள் தோன்றும் பொழுது ஆரம்பத்திலேயே அதற்குரிய மேலாண்மையை கற்றுக் கொண்டால், உரிய விதத்தில் அதை கையாளலாம்.

உங்கள் குழந்தைகளின் மனக்குழப்பத்திற்கான உண்மை நிலையை அறிந்தாலே பாதி குழப்பம் தீர்ந்துவிடும். குழப்பம் உண்டாக்கும் கோபம், ஆத்திரம் மற்றவர்களையும் தன்னையும் காயப்படுத்திக் கொள்வது போன்ற செயலைத் தவிர்க்கும் விதமாக உங்கள் ஆலோசனைகள் இருக்க வேண்டும்

மனக்குழப்பத்தை ஏற்படுத்திய நிகழ்வை உண்மையாக பெற்றோரிடம் பகிர்ந்து கொள்ளும் தைரியத்தை ஊட்ட வேண்டும்.

✤ பிறகு பார்த்துக் கொள்ளலாம் - Postpone the situation
✤ தவிர்க்கும் நிலை - Avoiding the situation
✤ பேசிப் பிரச்சினையைத் தீர்க்கும் நிலை - Take it out
✤ விட்டுக் கொடுத்து போவது - Compromise
✤ பகிர்ந்து கொள்வது - Share it with others
✤ கலந்தாலோசித்தல் - Negotiate
✤ அனுபவசாலியிடமிருந்து ஆலாசனைப் பெறுவது - Get Help
✤ வாய்ப்பளித்து சரி செய்தல் - Giving Chances



✤ நிகழ்வை அலட்சியப்படுத்துதல் - Ignore the Happening
✤ நகைச்சுவையுணர்வு - Humour
✤ பிறருக்கு உணர வைத்தல் - Explain to others
✤ மன்னிப்பு கேட்பது அல்லது மன்னித்து விடுவது - Apologize

என்று மேற்கூறிய 12 வழிகள் மூலமாக குழந்தைகளை, அவர்களுடைய வயது, அன்றையப் பிரச்சினையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு, ஆலோசனைகள் அளிக்க வேண்டும்.

இந்த 12 வகையானப் பிரச்சினையைத் திர்க்கும் வழிகளை புரிந்து கொள்ளவும், குழந்தைகளக்கு புரிய வைக்கவும் நம் புராண, இதிகாசங்களில் எண்ணற்ற விஷயங்கள் உள்ளன. படித்து எடுத்துக் கூறுங்கள்.

பலமான உறவின் அஸ்திவாரம், மற்றவர்களை குறைகளோடு ஏற்றுக் கொள்ளுதல், தெளிவுறுதல், நம்பிக்கை கொள்ளுதல் போன்றவை மனக்குழப்பம் இல்லாதவர்களுக்கும், குழப்பங்களைச் சந்தித்து அதிலிருந்து மீள்பவர்களுக்கும் ஏற்படும் நேர்மறை எண்ணங்கள் என்று புரிந்து செயல்படுங்கள்.

"வெள்ளத் தனைய இடும்மை பறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்".

(அதிகாரம் 63-இடுக்கண் அழியாமை-குறள் : 622)

கடலைப் போன்ற பெரிய துன்பமும் அறிவுடையவர்களுடைய மன வலிமையினால் நினைத்தவுடன் மறைந்துவிடும் எனும் வள்ளுவரின் வாக்கு பெற்றோர்களுக்கு பல விஷயங்களை எடுத்துக் கூறுகிறது.

தொடரும்....

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி.**

### நினைவஞ்சலி

நமது நினைவில் என்றும் நிறைந்து வாழும் பரிபூர்ண புருஷர் ஸ்ரீ ராமசந்திரர் (தர்மதிகாரி, ஸ்ரீ சிருங்கேரி மடம்) திருப்பூர்

வேதபாரதி

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## பொறாமையின் எழுச்சியும் வீழ்ச்சியும்



பல்லாண்டுகளுக்கு முன், இந்தியா அதிகம் பொருளாதார வளர்ச்சியை அடையாமலிருந்த அக்காலங்களில் , சாலைகளில் கார்களைக் காண்பதென்பது மிகவும் அரிது. ஒரு பெரிய செல்வந்தன் விசாலமான ஒரு காரை சொந்தமாக வைத்திருந்தான். அச்செல்வந்தன் தினமும் காலையில் அலுவலகத்திற்கச் செல்வதற்குத் தனது காரில்தான் பயணம் செய்வான். மாலையில் வீடு திரும்பும் போது, கடற்கரை சாலை வழியாக உல்லாசமாக அந்தக் காரை ஓட்டிக் கொண்டு செல்வான். பாதசாரிகள் அப்பணக்காரனைப் பார்த்துப் பொறாமைப்பட்டார்கள். “அந்தக் கார் என்னிடமிருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்'' என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஒரு நாள், அந்தக் கார் ஒரு லாரியின் மீது பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளனது. அருகிலிருந்தவர்கள், காரினுள்ளே மாட்டிக் கொண்டுவிட்ட அப்பணக்காரனைக் கஷ்டப்பட்டு வெளியே எடுத்து, அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தார்கள். துரதிர்ஷ்டவசமாக, அவனுடைய இரண்டு கால்களும் மிக மோசமாகச் சேதமடைந்ததால், முழங்காலுக்குக் கீழே அவற்றை வெட்டி எடுத்துவிட்டார்கள். தீவிர ரண சிகிச்சைக்குப் பின் அவனால் நடக்க முடியாததால், அவனது பணியாட்கள் அவனைத் தூக்கிக் கொண்ட சென்றார்கள். பணக்காரனின் இந்தப் பரிதாபமான நிலையைக் கண்ட பாதசாரிகள், “என்னக் கொடுமை இது! நல்ல வேளையாக நம்மிடம் கார் இல்லை. அதற்காக நாம் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். நடந்து செல்வதுதான் மிகவும் பாதுகாப்பானதாகும்'' என்று தங்களுக்குள் கூறிக் கொண்டார்கள்.



பொறாமை என்னும் தீய குணம், மனித உள்ளங்களில் எப்படி மேலே எழும்புகிறதென்றும், எப்படி பிறகு அது அடங்கிவிடுகிறதென்றும் இக்கதை நமக்கு எடுத்துக் காட்கிறது. ஒரு பொருளை ஒருவன் அடைந்திருப்பதினாலேயே அவன் அதனால் சந்தோஷத்தை அடைந்துவிட முடியாது. இத்தகைய எண்ணம் பொறாமையை அகற்றுவதற்கு உதவிகரமாய் இருக்கும்.

- தொடரும்...

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**
எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.
Cell : 94434 95950
Email - vedabharathichennai@gmail.com

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



மஹாபெரியவா முக்காலமும் அறிந்த பரமேஸ்வரன் பெரியவாளுடன் அனேகம்பேருக்கு பலவிதமான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. தம்முடைய அடியவர்களின் வாழ்வில் நடக்கப்போவதை, நடந்ததை தம்முடைய ஞானதிருஷ்டியால் அறிந்து அவர்களை கடாக்ஷித்தவர். அதே போல் பலருக்கும் எழுந்த பலவிதமான சந்தேகங்களை யாராலும் விளக்க முடியாத சந்தேகங்களை எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் அற்புதமாக விளக்கியுள்ளார். அப்படிப்பட்ட சந்தேகங்களையும் அதற்கு மஹாபெரியவா அளித்த அற்புத விளக்கங்களையும் மாதம் ஒரு விளக்கத்தை நம் வாசகர்களுக்காக இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம். இது பலருக்கும் அறிந்திருக்கும் இருப்பினும் தெரியாதவர்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த பகுதி.

### தமிழ்மாதங்களின் பெயர்கள் எப்படி வந்தன

**வைகாசி மாதம் :**

சிசாக சம்மந்தமான வைசாகம் விசாக நக்ஷத்திரத்தில் பெரும்பாலும் பௌர்ணமி ஏற்படுகிற மாதம்தான் வைசாகி மருதை என்பது மதுரை என்று திரிந்தது போல் சம்ஸ்கிருத **"வைசாகி"** தமிழில் **"வாகாசி"** என்று ஆயிற்று.

**ஆனி மாதம் :**

அனுஷ நக்ஷத்திரம் சம்மந்தமானது **"அனுஷீ"** அந்த நக்ஷத்திரத்தில் பௌர்ணமி ஏற்படுகிற மாஸம் அனுஷீமாஸம் தமிழில் "ஷ" என்ற எழுத்து உதிர்ந்து **"ஆனி"** என்றாயிற்று.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**




# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

TOWARDS 20th year of dedicated SELFLESS SERVICE

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"

எங்கள் பணி தொய்வில்லாமல் இங்கே தொடர்கிறது...



V.KRISHNAMOORTHY
Managing Trustee



P.AKASHRAM
Executive Trustee




ஏழை புற்றுநோயாளிகளை காக்கும் பணியில் **இருபதாவது ஆண்டை நோக்கி தனது பயணத்தை வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டு இருக்கும் ஸ்ரீ மாதா டிரஸ்ட்**, தனது சேவை பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் உறுதுணையாய் இன்றுவரை இருந்து வரும் மனிதநேயமிக்க நன்கொடையாளர்களான உங்களுக்கு ஏழை புற்றுநோயாளிகளின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றது.

சிலர் தேவைக்கு அதிகமாக உள்ளதை தர்மம் செய்கிறார்கள்; சிலர் தேவைகளை குறைத்துக் கொண்டு தர்மம் செய்கிறார்கள். எது எப்படியோ, ஏழை புற்றுநோயாளிகளுக்கு உதவ வேண்டும் என்ற சிந்தனையை எண்ணற்றோருக்கு ஏற்படுத்தியிருப்பதை எண்ணி ஸ்ரீ மாதா டிரஸ்ட் பெருமிதம் கொள்கிறது. அத்தகைய பெருமிதத்துடன் ஸ்ரீ மாதா டிரஸ்ட் மற்றும் நன்கொடையாளர்கள் இணைவதால் ஏழை புற்றுநோயாளிகள் சிகிச்சை காலம் முடியும் வரை "நம்ம தர்மசாலா"வில் உணவும்,



உறைவிடமும் **முற்றிலும் இலவசமாக** அனுபவிக்கிறார்கள். அதன் பயனாக அவர்கள் கேன்சர் ஆஸ்பத்திரியில் முறையான தொடர் சிகிச்சை பெற்று விரைவில் குணமடைந்து ஏழை புற்றுநோயாளிகளின் உயிர்கள் காக்கப்படுகிறது என்றால் அது மிகையல்ல.



தள்ளாத வயதிலும் தளராத தர்ம சிந்தனை கொண்ட **94 வயது நிரம்பிய** மனோரஞ்சிதம் பாட்டி 12.5.2019 அன்று **"நம்ம தர்மசாலா"**வில் உள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவளித்திட நன்கொடையும், புத்தாடைகளும் வழங்கி மகிழ்ந்தார்

**ஓர் வேண்டுகோள்...**

உங்களது திருமண நாள், குழந்தைகள் / பேரக் குழந்தைகளின் பிறந்தநாள் மற்றும் பாசம் மிகுந்த உங்களது பெற்றோர்களின் நினைவு நாட்களில் கொடிய புற்றுநோயினால் உயிருக்கு போராடும் ஏழை நோயாளிகளுக்கு, வயிறார உணவளித்து உதவ நீங்கள் விரும்புகிறீர்களா?

மிகவும் குறிப்பாக அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், அங்கேயிருக்கும் சூழ்நிலையில் தங்களது பெற்ற தாய் தந்தையருக்கு வருடந்தோறும் நன்றியுடன் நிறைவேற்ற வேண்டிய நினைவு நாள் கடமைகளை செலுத்த முடியாத போது, இதை ஒரு புனித நேர்த்திக்கடனாக கருதி, **"நம்ம தர்மசாலா"**வில் ஏழை புற்றுநோயாளிகளுக்கு அந்த குறிப்பிட்ட நாளில் உணவு அளிப்பதன் மூலம், பெற்றோர்களுக்கு அளிக்க வேண்டிய உரிய மரியாதையை செய்ய விரும்புகிறீர்களா?

உங்களது நல்ல எண்ணங்களுக்கு மன நிம்மதியளிக்கக் கூடிய சரியான தீர்வு ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு நிதியுதவி செய்து **"நம்ம தர்மசாலா"**வில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகள் உயிர் பிழைக்க உங்களால் முடிந்த உதவி செய்வதுதான்! **இதைவிட சிறந்த மனிதநேய செயல் வேறு எதுவுமேயில்லை!!!**

**ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு உதவ வேண்டியதன் அவசியத்தை சான்றோர்கள் கூறுகிறார்கள்... கேளுங்களேன்...!**



**ஜோதிட சக்கரவர்த்தி திரு.ஏ.எம்.இராஜகோபாலன்**

அடையார் புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒரு தனி உலகம். ஆம், கொடிய நோய் மட்டுமல்ல, அதைவிட கொடிய சிகிச்சையும் கூட. இத்தகைய சோதனைக்கு உள்ளான துர்பாக்கியசாலிகளுக்கு நம்பிக்கையும் உதவியும், இருக்க இடமும், உண்ண உணவும் தருவதை ஓர் ஒப்பற்ற தர்மகாரியமாக, காஞ்சி காமகோடி மகாபெரியவர் ஆணையை ஏற்று, பரமபக்தியுடன், இம்மாபெரும் கைங்கர்யத்தை எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.வி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஸ்ரீ மாதா டிரஸ்ட் மூலம்



செய்து வருவது போற்றுதலுக்கும், புகழுக்கும் அப்பாற்பட்ட, உத்தம பணியாகும். பகவானும், மகாபெரியவாளும் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், அவருக்கு துணையாக பணியாற்றி வரும் அன்பர்களுக்கும் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அளிக்க எம்பெருமானை வேண்டுகிறேன்.



**முனைவர் ஸ்ரீலஸ்ரீ முத்துகுமார ஸ்வாமிகள், இளைய சந்நிதானம்,** தருமபுர ஆதீனம்

ஸ்ரீ மாதா டிரஸ்ட் இன்று பார்வையிடலாயிற்று. இங்கு தங்கி இருக்கும் நோயாளிகளை தங்கள் பிள்ளை போல, தாய் தந்தை போல பாவித்து பராமரிப்பது உயர்வானது, உன்னதமானது, சிறப்பானது. இப்பணி யாராலும் செய்ய முடியாதது, இதை ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி சிறப்பாக நடத்துகின்றார்.



**இல.கணேசன்,** மாநிலங்களவை உறுப்பினர்: எதிர்காலத்தைப் பற்றி ஓர் நம்பிக்கை இங்கு வந்த பிறகு உறுதிப்படுகிறது. மோசமான ஒரு சூழ்நிலை வெளி உலகில் தென்பட்டாலும், இதுபோல நல்ல உள்ளங்கள் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் தொண்டு புரிவது நமக்கும் ஊக்கம் தருகிறது.



**சிவசங்கரி,** எழுத்தாளர் : மனது நிறைந்திருக்கிறது; எப்பேர்பட்ட உன்னதமான சேவை. நிர்கதியாய் நிற்கும் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வீடு போல் நாங்கள் இருக்கிறோம் என்ற நம்பிக்கையைத் தருவது வார்த்தைகளால் பாராட்ட இயலாத தொண்டு. கடவுள் இத்தொண்டர்களுக்கு எல்லா பாக்கியங்களையும் தர வேண்டுகிறேன்.



**துக்ளக் சத்யா,** மடிப்பாக்கம் : தர்மத்தை நீ காப்பாற்றினால் தர்மம் உன்னைக் காப்பாற்றும் என்பது கீதையில் பகவான் சொன்னது. மாதா டிரஸ்ட் சேவை மகத்தானது. இது மேலும் வளர வேண்டும் என்று கடவுளை ப்ரார்த்திக்கிறேன்.



**விட்டலதாசர், (JKD)** ஸ்ரீ பாண்டுரங்க பஜனாஸ்ரமம், கோவிந்தபுரம்

இதுவரை பார்த்த தர்மங்களில் இதுபோன்ற தர்மத்தை பார்த்தது இல்லை. இது மேன்மேலும் வளர ஸ்ரீ ருக்மணி விட்டலை ப்ரார்த்திக்கிறேன்.



**உரத்த சிந்தனை உதயம் ராம்,** சென்னை : உள்ளதை கொடுப்பது தர்மம். உள்ளதையெல்லாம் கொடுப்பது தானம். உள்ளதையும் உள்ளத்தையும் கொடுப்பதுதான் மனித நேயம். இந்த தர்மசாலாவில் இதை கண்கூடாக பார்க்கிறேன். மகிழ்ச்சியுறுகிறேன்.



**R.B.V.S.மணியன்** : எனது நெடுநாளைய நண்பர் திரு.கிருஷ்ண மூர்த்தி ஆற்றி வரும் இந்த புனிதத் தொண்டினை நேரில் காணும் வாய்ப்பு பெற்றேன். இந்த நல்ல உள்ளங்களை நினைந்து நினைந்து வியக்கிறேன். அவர்களது ஆசியை நான் வேண்டுகிறேன்.



**டெல்லி கணேஷ் திரைப்பட நடிகர் :** மனதுக்கு நிறைவு தரும் அருமையான இடம். திரு.கிருஷ்ணமூர்த்தியின் சேவை அளவிட முடியாதது. நோய் நொடியில்லாமல் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நூறாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறேன்.

**SANDEEP RAI RATHORE**, IPS, ADGP, TN-STF : Visited this very worthy Institution today. The work being done by Sri Matha Trust is in service of humanity and beyond words. The cause is inspiring and humbling. Have learnt a lot today and would carry the virtue. God Bless. Jai Hind.

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவளித்தல் என்பது அன்னதானம் மட்டுமல்ல; அவர்களது உயிரை மீட்டெடுக்கும் உயரிய தர்மமாகும். "நம்ம தர்மசாலா"வில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு உங்கள் கரங்களால் உணவளித்து உண்மையான இன்பத்தை உணருங்கள்...**

Early detection ➡ Timely treatment ➡ Cures CANCER

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்...**

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்

ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்

ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "நம்ம தர்மசாலா"வின் செலவினை ஏற்கலாம்

ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்

ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் அல்லது

ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution to SRI MATHA TRUST by

CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST | Bank Name: INDIAN OVERSEAS BANK

Branch: Gandhi Nagar, Chennai-20.

Current A/c No.: 163502000001090 | IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.

After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Opp. to Thirukkural Unavagam] Adyar, Chennai - 600 020.
Tel: (044) 2442 0727 / (044) 4266 1687 Mobile: 9444001065 / 9381020727 9003247857 Email : vkrishnamoorthy.smt@gmail.com

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar, Adjacent to IIT Compound, Off:Pallipattu Main Road, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: 'NATHA KAMALAM' 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.



ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா,
ஓம் நமோ நாராயணாயா.

# ஸ்ரீமத் பகவத்கீதை

**டி. சூரியநாராயணன்** பகுதி - 2



யுத்தம் தொடங்குவதற்கு அறிகுறியாக சங்குகள், பேரிகைகள், பறைகள் முதலியன முழங்குகின்றன. அப்போது அர்ஜுனன் பகவான் கிருஷ்ணனிடம் "கிருஷ்ணா நம்மை எதிர்த்து போரிட யாரெல்லாம் வந்திருக்கிறார்கள் என்று எனக்குப் பார்க்க வேண்டும். அதானால் (சேனயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேச்யுத) தேரின இரண்டு சேனைகளுக்கும் நடுவில் கொண்டு நிறுத்துக்கள்" என்ற கேட்டக் கொள்கிறான். கிருஷ்ணரும் அப்படியே செய்கிறார். அர்ஜுனன் இரு சேனைகளிலும் நிற்கும் தன்னுடைய பாட்டனார், மாமன்மார்கள், அண்ணன்கள், தம்பிகள், புதல்வர்கள், ஆசாரியர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரைக் கண்டதும் நிலை தடுமாறிப் போகிறான். உடனே தன்னுடைய கையிலிருந்து வில்லையும் அம்பையும் துக்கி எறிந்துவிட்டு "கிருஷ்ணா போரில் எனது உறவினர்களை கொன்றுவிட்டு அதனால் கிடைக்கும் வெற்றியும், அரசாட்சியும் எனக்கு வேண்டாம், கிருஷ்ணா இந்த யுத்தம் தேவையா? அவசியமா? என்னுடைய துக்கத்தை நீக்கிக்கொள்ள நீர்தான் ஞான உபதேசம் அருள வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறான். அதற்கு கண்ணன் அளிக்கும் பதில்தான் "பகவத் கீதை" அர்ஜுனனுக்கு ஏற்பட்ட தயக்கம் பயம் சோர்வு ஆகிய மன நோய்களுக்கு பகவான் கிருஷ்ணன் ஒரு மருந்தளித்து தெளிவு படுத்துகிறார். அவருடைய அந்த உபதேசங்கள்தான் "கீதோபதேசம்". சோக சாகரத்தில் இருந்த அர்ஜுனனுக்கு கீதா உபதேசம் செய்கிறார் பகவான் ஸ்ரீமத் பகவத் கிதா = ரூ = என்றால் "திரு" அல்லது "செல்வம்" என்று பொருள். மத்

= என்றால் "உடைய" என்று பொருள், பகவத் = "பூரணமான இறைவன்" என்று பொருள், ஆக "ஸ்ரீமத் பகவத் கீதா" = என்றால் திர பொருந்திய அறுகுணங்களையுடைய இறைவனுடைய திருப்பாடல்கள், அல்லது "இறைவனுடைய அருள் மொழிகள்" என்றும் பொருள் கொள்ளலாம்.

கண்ணனுடைய வாக்கில் தோன்றிய பகவத்கீதை என்கிற உபதேச மொழிகள் உலகத்தில் எந்தத் தொழிலில் ஈடுபட்டு எந்த நிலைமையிலிருப்பவர்களுக்கும் எந்த குண விசேஷங்களுடன் பிறந்தவர்களுக்கும் வழிகாட்டி உதவும்படியான சாஸ்திரமாகப் பெரியோர்களால் கருதப்பட்டு வருகிறது. பகவத்கீதை பாரதத்தில் ஒரு பாகம். எந்த எந்தச் சமயத்தில் எந்த எந்தக் கடமை விதிப்படி ஏற்பட்டிருக்கிறதோ அதைச் சரிவரச் செய்ய வேண்டும். செய்து முடித்துவிட்டு அதன் பயனை ஆண்டவனுக்குச் சமர்ப்பித்து விட வேண்டும். இதுவே கண்ணனின் உபதேசம்.

தொடரும்....

**டி.சூரியநாராயணன்**





உ
குருவே சரணம்

## வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

# யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

**நாள் :**
**30.06.2019 ஞாயிறு**
**காலை 9.00 மணி**

**இடம் :**
**சேம்பர் ஹால்**
(கண்ணன் டிபார்ட்மென்டல்ஸ்டோர்ஸ் பின்புறம்) வாலிபாளையம், திருப்பூர்

1. 7வது வகுப்பிற்கு மேல் உள்ள பெண் குழந்தைகள் தங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உடன் கலந்து கொள்ளலாம்.
2. குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சிகள் துவங்கும்
3. தன்னம்பிக்கை, பெற்றோர் மேன்மை, நட்புக்கும் உறவிற்கும் ஆன புரிதல் விழிப்புணர்வு வகுப்புகள் நடைபெறும்.
4. இந்த அட்டையை அவசியம் கொண்டு வரவும்.

**சிறப்பு அழைப்பாளர்கள் :**

**டாக்டர். ஷ்யாமா ஸ்வாமிநாதன்**
**காந்தலட்சுமி சந்திரமௌலி**
**திருமதி.சாந்தாமணி**
**ஸ்ரீ சந்திரசேகர்**

**மேலும் தொடர்புக்கு : 94434 95950**



உ
குருவே சரணம்

## வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

# இல்லத்தரசிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு

1. இளம் சிறார்களுக்கு நன்னெறி வகுப்புகள் நடத்திட
2. 7ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை கல்வி பயிலும் பெண் குழந்தைகளுக்கு சமூக வலைதளங்கள் தொடர்பாக விழிப்புணர்வு வகுப்புகள் நடத்திட, தன்னம்பிக்கை வாழ்வியல் கல்வி கற்றுக் கொடுக்க, விருப்பமுள்ளவர்கள் பயிற்சி பெற விண்ணபிக்கலாம்.
3. பதிவு செய்யும் பெண்களுக்கு (வயது வரம்பு 40க்குள்) பயிற்சி வகுப்புகள் இலவசமாக கற்றுக் கொடுக்கப்படும்.
4. வேதபாரதி ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளுக்கு வகுப்புகள் நடத்தினால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு :

**9443495950 / 99949 26537**

**Email : vedabharathichennai@gmail.com**

செங்கல்பட்டு அருகிலுள்ள சிவாலயத்திற்கு
பூஜை செய்ய பூஜை முறை தெரிந்த அந்தணர் தேவை.

**மாத சம்பளம் ரூ.12,000/-**

வீடு மற்றும் உணவுக்குத் தேவையான ஏற்பாடு செய்யப்படும்.

தொடர்புக்கு :

**9443495950 / 9790920672**

# தர்மத்தின் குரல்

## அத்தியாயம் 2 : மறுபிறப்பு

## 2.14. இன்னும் சில கேள்விகள் : பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

சென்றவார தொடர்ச்சி...

போக்குவரத்து விபத்துக்களில் சிக்கியவர்கள் சிலர், தங்களின் கடந்த காலத்தையே மறக்கின்றனர். அதைப்போலவே இங்கும் நடக்கலாம். ஜீவனுக்கு ஸ்தூல சரீரத்தின் மீது ஆழமான பற்று உள்ளது. அதனால்தான் அது இறப்புக்கு அஞ்சுகிறது. காப்பி, சிகரெட் ஆகியவற்றின் பழக்கத்திலிருந்தே விடுபடுவது கஷ்டமாக இருக்கிறபோது, உடலை விடுவது எவ்வளவு பயமுறுத்தலானது என்பதை ஊகிக்கலாம் எனவே, பிறவியெடுக்கும் முறையே அதிர்ச்சிதரக் கூடியதாகும். அதற்கு இரண்டு காரணங்கள்; ஒன்று, கழந்தை பிறக்கும் முறையிலிருக்கும் ஆபத்து, இரண்டு; விபத்துக்கள் மன அதிர்ச்சியையும் அதனால் மறதியையும் மறதிக்குக் காரணம் எதுவாக இருந்தாலும், நிச்சயமாக அது ஒரு சிக்கலானதாகும். ஆனால், கருப்பையில் இருக்கும்வரை, பழைய நினைவுகள் இருக்கும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

ஆனால், முந்தையப் பிறவிகளைப்பற்றிய நினைவுகள் இருந்த சிலரைப் பற்றி மகாபாரதத்தில் நாம் கேள்விப்பட்டிரக்கிறோம். ஜடபரதர் என்பவர் ஒரு சிறந்த தபஸ்வி. அவரின் வாழ்க்கையின் கடைசிக் காலத்தில், அவர் ஒரு மானைச் சாவிலிருந்து காப்பாற்றி வளர்த்து வந்தார். அந்த மானின் மீது அவருக்கு அசாத்திய பாசம் வளர்ந்தது. இதன் விளைவாக அவர் மானாய்ப் பிறந்தார். அனால், அவரின் தவ வலிமையால், முந்தையப் பிறவி பற்றிய நினைவு நிலைத்து நின்றது. காலப் போக்கில், அவர் விமோசனம் பெற்ற ஆன்மா ஆனார்.



*3. முற்பிறவி உள்ளது என்பதற்கு, ஏதேனும் விஞ்ஞானச் சான்று உள்ளதா?*

இருக்கலாம் மனத்தின் நிலைமையை ஆய்வு செய்வதற்கு, இப்பொழுது கருவிகள் உள்ளன. ஒரு மிருகம் விழித்துக் கொண்டிருக்கிறதா, கனவில் உள்ளதா அல்லது ஆழ்ந்த தூக்கத்தில் இரக்கிறதா என்று அக்கருவிகளால் கண்டறிய முடியும். இத்தகைய சோதனைகள் பசுக்கள், ஆடுகள் ஆகியவற்றின் கருக்களில் நடத்தப்பட்டுள்ளன. பசுவில் இருந்த 240 நாட்களான ஒரு கரு 9.7% நேரம் விழித்திருந்தது. 32% கனவிலும் 58% ஆழ் துயிலிலும் இருந்தது. அவ்வாறே ஒரு ஆட்டின் 145 நாட்களான கரு, 10% நேரம் விழித்தும், 38% கனவிலும், 51% ஆழ்துயிலிலும் கழித்தது. (The Sleeping Brain; Editor Michael H. Chase, Caltch Publication, Experiments by Henry Van Twyver 972) ஏற்கனவே அனுபவித்தவற்றைத்தான் ஒருவன் கனவு காண்கிறான் என்பதும், விழித்திருக்கும் போது பழைய நிகழ்வுகளைத்தான் அசைபோடுகிறான், சிந்தனை செய்கிறான் என்பதும் நாம் அறிந்தனவே. எனவே, ஜீவாத்மா கருவில் விழித்த நிலையில் இருக்கும்போது சிந்தனை செய்வதும், தூக்கத்தில் கனவு காண்பதும் அதன் முந்தைய அனுபவங்களிலிருந்துதான் நிகழ வேண்டும். அந்த அனுபவங்கள் முந்தைய பிறவிகளிலிருந்து தான் வந்திருக்க வேண்டும்.

தொடரும்......

**ஜாதக பரிவர்த்தனைக்கு அனுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| | |
|---|---|
| **திருமதி. தனலட்சுமி** | **திருமதி. ராஜலட்சுமி** |
| **9444140119** | **7092199447** |

# ஸந்த்யா வந்தன பயிலரங்கம்

வேதபாரதி அமைப்பு இந்த ஆண்டு கோடைகால ஸந்த்யா வந்தண பயிற்சி முகாம்,கோவிந்தபுரம், ஸ்ரீ விட்டல் ருக்மணி ஸமஸ்தான் கோவில் வளாகத்தில் மே 24,25,26 ஆகிய மூன்று நாட்களும் மிக விமரிசையாக நடைபெற்றது. 23.05.2019 வியாழன் காலை வேதபாரதி நிர்வாகிகள் கோவில் வளாகத்தில் முன்னேற்பாடுகள் செய்யத் துவங்கினாக்ரள். 145க்கும் மேற்பட்ட அன்பர்கள் முன் கூட்டியே பதிவு செய்திருந்தார்கள். அவர்களை வரவேற்று தங்க வைத்து வேதவிற்பன்னர்களை கொண்டு கற்றுக் கொடுத்து ஸனாதன தர்மத்தில் ஆலைவேரை நினைவூட்டுதலும், வேதபாரதி முனைப்புடன் செயலாற்ற தயார் நிலையில் இருந்தது. மூன்று நாட்களுக்கும் தேவையான தங்கும் அறைகள், உணவுக் கூடம், சமயற்கூடம், சமையற்கலைஞர்கள் ஏற்பாடு செய்ததில் ஸ்ரீ ஸ்ரீ விட்டல் மஹராஜ் ஆதரவுடன் கும்பகோணம் ஸ்ரீ ராமகிருஷ்ணன் குடும்பத்தினர் எல்லா முன்னேற்பாடுகளையும் செய்யத்துவங்கினார்கள்.

திருச்சி நித்யா வேளச்சேரி சாந்தா மாமி மிக நேர்த்தியாக பதிவு செய்தல், அறை பங்களிப்பு செயல்களை செய்திருந்தனர். 24.05.2019 வெள்ளிகிழமை காலை முதல் ஸ்மார்த்த வைஷ்ணவ சிவாச்சார்யர் பிரிவு ஆசிரியர் ப்ராதஸ்ந்த்யா அனுஷ்டிக்கவும், ஸமிதாதானம் பயிற்சி கொடுக்கவும் தயார் நிலையில் இருந்தனர். 125 மாணாக்கர்களும், காலை தங்களை தயார் செய்து கொண்டு ஸந்த்யா வந்தண பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. குழந்தைகளுக்கு பால், பெரியவர்களுக்கு காபி வழங்கப்பட்டது. காலை 7.30 மணி முால் யோகாஸன பயிற்சியும், 8.30 மணி முதல் காலை சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. 10.00 மணி முதல் அமர்வில் துவக்க விா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 11.00 மணி முதல் மந்திர படனம், 12.00 மணிக்கு மாத்யான்ஹிகம் 2.30 மணி முதல் யோகாச்சார்யர் ஸ்ரீ சந்தி சேகர் ஜி குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் அபிவாதயே விளக்க நிகழ்ச்சியும் நடைபெற்றது.

24ம் தேதி மாலை முல்லை வாசல் ப்ரும்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் குழந்தைகளுக்கு நல்வழிகாட்டி



வேதத்தின் சாரம் காயத்ரீ மந்திர மஹிமை குறித்து விளக்கம் கொடுத்தார்கள். மாலை குழந்தைகளும், பெரியவர்களும் கோவிந்தபுரம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ போதேந்திராள் ஸ்வாமிகள் அதிஷ்டானம் சென்று வழிபட்டார்கள். குழந்தைகளுக்கு போதேந்திராள் ஸ்வாமிகள் வரலாறு சொல்லிக் கொடுக்கப்பட்டது. இரவு உணவிற்குப்பின் தனித்திறமை நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடரும்....





## ஸ்ரீ காஞ்சி பெரியவாளின் ஆசிகளுடன் யுவஸ்ரீ

சென்னை - துரைப்பாக்கம் ஸ்ரீ ஷங்கரா பள்ளிக்கூடத்தில் ஸ்ரீ காஞ்சி பெரியவா ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் முகாமில், 18.05.2019, சனிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு வேதபாரதி யுவஸ்ரீ குழந்தைகளின் கருத்தரங்கம் ஏற்பாடாகியிருந்தது.

நமது தேசகலாசாரமும் குடும்ப பாரம்பரியமும், தன்னம்பிக்கையும் சுயபாதுகாப்பும் தொடர்ந்து வருவது நட்பா? உறவா? நான் சந்திக்கும் சமூக பிரச்சினைகளும் அவற்றை சமாளிக்கும் விதமும் என்கிற தலைப்புகளில் பெண் குழந்தைகள் பேச வேண்டும்.

நானும் (ஷ்யாமா சுவாமிநாதன்) திருமதி.காந்தலட்சுமி சந்திரமொளலி அவர்களும் மதியம் ஒன்றரைக்கு ஆஜராகி, பெரியவரின் ஸ்ரீ சந்திரமௌலிஸ்வர பூஜையை தரிசிக்கும் மகா பாக்கியம் கிடைக்கப்பெற்றோம்.

மூன்று மணிவாக்கில் திருச்சி திரு.யோகா சந்திரசேகர் அவர்கள், அவருக்கே உரிய கலகலப்பான முறையில் கருத்தரங்கைத் தொடங்கிவைத்து, ஒவ்வொரு பெண்ணாக அழைத்து பேசவைத்தார். நான் சந்திக்கும் சமூகப் பிரச்சினையும் சமாளிக்கம் விதமும் என்கிற தலைப்பை தவர மற்ற தலைப்புகளில் பேசினார்கள். பேசியவரையில் பேசிய குழந்தைகள் அனைவருமே அந்த வயதுக்குரிய மன முதிர்ச்சி மற்றும் விழிப்புணர்வுடன் பேசியது பாராட்டுக்குரியது.

பி.காம். இரண்டாம் ஆண்டு படிக்கும் காவ்யா, உடை, உணவு, யோகாவின் முக்கியத்துவம் பற்றி பேசிவிட்டு, நண்பர்களை சந்திக்கவும், செல்பி எடுத்துக் கொள்ளவும் தான் இன்றைய பெண்கள் கோவிலுக்குப் போகிறார்கள் என்று வருத்தத்துடன் சொன்னார்.

யுவராணி, இருவரும் பி.காம் தான். தன்னம்பிக்கை மற்றும் சுய பாதுகாப்பு பற்றி ஆணித்தரமாக பேசியது வியக்கவைத்தது. இந்த மன முதிர்ச்சி இவர் வயதையொத்த பெண்களுக்கு இருந்துவிட்டால் அவர்களின் பாதுகாப்பு பற்றி பெற்றோர்கள் கவலைப்படாமல் இருக்கலாம்.



டில்லியிலிருந்து வந்திருந்த ரம்யா வகீலக்க படித்தவர் என்பதால் தனது கருத்துக்களை மிக அழகாக எடுத்துரைத்தார். குறிப்பாக, சிறந்த சிந்தனைகளை வளர்த்துக் கொள்வது, அமைதி தருகின்ற தெய்வீகப் பாடல்களை கேட்பது, தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது, தைரியமான முடிவுகளை எடுப்பது என்று மிகவும் சிந்தனையைத் தூண்டும் வகையில் பேசினார்.

ஸ்ரீகரி, பி.டெக்., மூன்றாம் ஆண்டு மாணவி, கலாசாரம், பண்பாடு, பாரம்பர்யம் எல்லாம் வீட்டிலிருந்து தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு சந்ததி, சந்ததியாக பின்பற்றப்பட வேண்டும் என்றும், இதிகாச புராணங்களிளிருந்து வாழ்க்கையின் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்று விளக்கிவிட்டு, இன்றைய இளம் பெண்களுக்கான Balance Behaviour, Good Firendship என்று பல விஷயங்களை அழகாகத் தொகுத்து பேசினார்.

பேராசிரியை சௌந்தர்யா, முனைவர் பட்டம் பெற்றவர். அசிரியருக்கே உரிய பணியில் பெரும்பாலும் ஆங்கிலத்தில் இன்றைய இளம் பெண்களுக்கு இருக்க வேண்டிய அனைத்து அம்சங்களையும் மழையெனப் பொழிந்தார்.

இன்ஜினீயரிங் படிக்கும் சாயானந்தி, என்ற பெண் நட்பையூம் உறவையும் பற்றி நன்கு அலசி, இருவரையும் எவ்வாறு தக்கவைத்துக் கொள்வது என்று அழகாக எடுத்துரைத்தார்.

பி.டெக் படிக்கும் ஸ்ருதியும் நட்பு - உறவு பற்றி பேசியதுடன் நல்ல / தீய நட்பினை எவ்வாறு அடையாளம் காணவேண்டும் என்று தெளிவாக விளக்கினார். முத்தாய்ப்பாக பெற்றோர்கள் மட்டுமே நிரந்தரமான துணையும் ஆதரவும் என்று சொன்ன போது நிறைய கைதட்டல்களை அள்ளினார்.

பாட்டியின் பேத்தியாக நான் வளர்க்கப்பட்ட என் சிறுவதுப் பருவத்தை நானே என் கண்முன்னால் பார்க்கும் படியான பெண்ணாக என் முன் வந்து நின்று பேசிய ஸ்ரீ லலிதா, ஒன்பதாவது வகுப்பில் காலடி வைத்திருக்கும் இந்த சிறுமி பாட்டியின் வழிகாட்டுதலைப் பற்றி பேசி நெகிழவைத்தாள்.

இறுதியாகப் பேசிய வர்ஷா, அமெரிக்காவில் பள்ளிப்படிப்பை அனுபவித்து இந்திய கலாசாரமே எனக்கு பிடித்தது என்றும், நல்ல மற்றும் தவறான சிந்தனைகளைப் பற்றியும் அளவாகப் பேசினார்.

பேராசிரியை சௌந்தர்யா பேசிக்கொண்டிருக்கும் போதே, ஸ்ரீ விஜயேந்திர பெரியவா மேடைக்கு வந்து அமர்ந்து அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தது மிகவும் பாக்கியமான விஷயம்.

தொகுத்து முடிவுரை வழங்கும் பொறுப்பு எனக்கும், திரமதி.காந்தலக்ஷ்மிக்கும் இருந்தது. ஆனால் பெரியா ஆசியுரை வழங்கக் காத்துக் கொண்டிருக்கிறாரே என்கிற தவிப்பும், பெரியவா மன்பு ஒழுங்காகப் பேச வேண்டுமே என்கிற பதட்டமும் ஏற்பட, என் கையில் மைக் வந்துவிட்டது.

நான் சந்திக்கும் சமூகப் பிரச்சினையும் அதனை சமாளிக்கும் விதம் பற்றி ஒருவர் கூட பேசவில்லை என்பதையும், எங்கு சென்றாலும், பெண்களுக்கு அழகு புடவை, நெற்றிப் பொட்டு, பின்னிய கூந்தல் ஆகியவைதான் என்பதனைக் குறிப்பிட்டுவிட்டு, குழந்தைகளை பாராட்டிவிட்டு, திருமதி.காந்தலக்ஷ்மியிடம் மைக்கை கொடுத்துவிட்டேன். அவரும் குழந்தைகளைப் பாராட்டிவிட்டு, பெற்றோர்களின் பங்கு மற்றும் இளம் வயதுப் பெண்களுக்கான மனரீதியான ஆலோசனைகளைப் பற்றி கனகச்சிதமாக குறிப்பிட்டுவிட்டு அமர்ந்தார்.

ஸ்ரீ விஜயேந்திர பெரியவாளின் ஆசியுரையுடனும் குழந்தைகளுக்கு வேதபாரதியின் அன்புப்பரிசு வழங்குதலுடனும் வேதபாரதியின் யுவஸ்ரீ நிகழ்ச்சி சிறப்பாக முடிந்தது.

**பின்குறிப்பு** : வைகாசி விசாகம் முருகனும் வந்து நம்மில் ஒருவராக கலந்து கொண்டது போல், கார்த்திக் என்ற பெயரில் ஒரு பாலனும் வந்து, Friendship & Family பற்றி அமெரிக்க ஆங்கிலத்தில் நட்பின் முக்கியத்துவத்தை மிக அழகாக வலியுறுத்தி பேசியது நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்தது என்றே தோன்றியது.

**- டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**




# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**மணிமங்கலம், தாம்பரம், சென்னை**

**CODE 1405**

**பாடப்பிரிவுகள்:**

**இளநிலை (பி.இ.)**

**MECHANICAL, CIVIL, CSE, ECE, EEE**

**கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**

**வளாக கட்டமைப்பு: கல்லூரி வளாகம் பசுமைச் சூழலில் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி வளாக கட்டமைப்பை தன்னுள்ளே கொண்டுள்ளது.**

**சிவனடியார்கள் குடும்பக் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.**



டாக்டர். **வி.பி.இராமமூர்த்தி.** பிஎச்.டி
நிறுவனம் மற்றும் கல்லூரி தலைவர்
மேனாள் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

டாக்டர். வி.பி.ஆர். நகர், மணிமங்கலம், தாம்பரம்,
சென்னை – 601 301, தமிழ்நாடு

**Ph : 9 283 283 283 / 72 9999 6789 / 98416 55959**
**044 - 71 700 801 / 803 / 2436 3321.**
**www.dce.edu.in**

## ஸந்த்யா வந்தன பயிலரங்கம் - கருத்துக்கள்




G. SIVAGAMASUNDARI
99940 89133



N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**


# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

*செல்:* **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **12.05.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**05.05.2019, ஞாயிற்றுக்கிழமை**

மாங்காடு அருகில் உள்ள கொழுமணிவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள **அருள்மிகு சிவகாமவல்லி அம்பாள் உடனுறை பாலீஸ்வரர் (தீர்த்தபாலீஸ்வரர்)**